மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

14.08.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# ஜெனீவாவை எதிர்கொள்ள விசேட பொறிமுறை

## தயாராகிறது இலங்கை அரசாங்கம் என்கிறார் நீதி அமைச்சர்



ஐ.நா. மனித ரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் விசேட பொறிமுறையையொன்றை தயாரித்து வருகின்றது. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி ஆரம்பித்து ஒக்டோபர் 7ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணகத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் அறிக்கையை சமர்பிக்கவுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுப் பணியகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகள் பற்றி தெரிவிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். இதனைவிட சட்டம், ஒழுங்கு, அரசியலமைப்பு விடயங்கள் தொடர்பாக எடுத்துரைக்கவுள்ள அதேவேளை ஐ.நா. கூட்டத் தொடரை எதிர்கொள்ள அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைந்து விசேட பொறிமுறையை தயாரிக்கவுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். இருப்பினும் மனித உரிமைப் பேரவையைப் பயன்படுத்தி தமது அரசியல் இலாபங்களை தேட சிலர் முயற்சிப்பதாக குற்றம் சாட்டிய நீதி அமைச்சர், பிரச்சினைகள் தீர்க்கப்படுவதை அவ்வாறானவர்கள் விரும்புவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.



செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் படுகொலை செய்யப்பட்ட 61 மாணவிகளின் நினைவு தினம் இன்று யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் இடம்பெற்ற போது..

# பலம்வாய்ந்த நாடுகளுக்கு இரையாகியுள்ள இலங்கை



தேசிய பாதுகாப்பு கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனை கூறியுள்ளார். நாட்டில் நிலவும் ஸ்திரமின்மை மற்றும் வங்குரோத்து நிலை காரணமாக பலம் வாய்ந்த நாடுகளுக்கு இலங்கை இரையாகிவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

# திருத்தத்தில் உடன்பாடு இல்லை



22ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்புச் சபைக்கான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு மாற்ற அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை எதிர்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. முன்னதாக அந்த நியமனங்களை வழங்கும் அதிகாரம் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இருந்ததாக அக்கட்சியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு 02

# நாளை முதல் தபால் கட்டணங்கள் அதிகரிப்பு

நாளை (15) முதல் திருத்தப்பட்ட தபால் கட்டணங்கள் அமுலுக்கு வருவதாக தபால் மாஅதிபர் ரஞ்சித் ஆரியரத்ன அறிவித்துள்ளார். அதற்கமைய, ரூ. 15 ஆக உள்ள சாதாரண கடித கட்டணம் ரூ. 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பதிவுத் தபால் கடிதம் ரூ. 30 இலிருந்து ரூ. 60 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது பெரும்பாலும் பொதுமக்களிடையே சாதாரண தபால் பயன்பாடு 02

# மின்வெட்டு நேரம் அதிகரிப்பு

நாளை (15) மற்றும் நாளை மறுதினம் (16) ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கு மின்சாரத்தை துண்டிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, **A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W** வலயங்களில் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியில் இவ்வாறு மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# இறக்குமதி செய்யப்பட்ட உணவு பொருட்களின் விலை குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்ட நிலையில் அந்த விலையில் விற்பனை இடம்பெறுகின்றதா என்பதை கண்டறிய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் சோதனைகளை மேற்கொள்ள நுகர்வோர் விவகார அதிகாரசபை ஏற்பாடுகளை செய்துள்ளது. மொத்த விற்பனையாளர்களுக்கு தற்போது திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையில் சிறிது குறைவு ஏற்பட்டது.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் அந்த நன்மையை நுகர்வோருக்கு அளிக்கிறார்களா என்பதைக் கண்டறிய சோதனைகள் நடத்தப்படுகின்றன.

# ஒரு தொலைபேசி எண்ணில் பல வாகனங்களை பதிவு செய்ய புதிய வசதி

தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டு முறையில் பல வாகனப் பதிவுகள் தொடர்பான புதுப்பிப்பை எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர வழங்கியுள்ளார். அந்த வகையில், அரசு நிறுவனங்கள், நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் இப்போது ஒரு தொலைபேசி எண் அல்லது பல தொலைபேசி எண்கள் கொண்ட பல வாகனங்களை ஒரு வணிகப் பதிவு எண்ணின் கீழ் பதிவு செய்யலாம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கமைய, **http://fuelpass.gov.lk** என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து, வணிக பதிவு எண் (**BRN**) 02

# வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வைத்தியர் ஹரித அலுத்கே இவ்வாறு தெரிவித்துள்ளார். 02

# விவசாயிகளுக்கு எரிபொருள்

நெல் அறுவடையின் போது, விவசாயிகளுக்கு பிரச்சினையின்றி எரிபொருளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை, பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளின் ஏகபோகத்தை வரும் பருவத்தில் இருந்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அரச செலவுகளை கட்டுப்படுத்தவும்

அரச செலவுகளை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவால்களை வெற்றிக்கொள்வதற்காக அரச செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கடுமையான கட்டுபாடுகளை விதிக்குமாறு, ஜனாதிபதியின் செயலாளரால் அமைச்சின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றும் சகல அமைச்சிகளினதும் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே ஜனாதிபதியின் செயலாளரால் இந்த சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் திறைசேறி சுற்றுநிருபத்தை கடுமையாக பின்பற்றுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தனிநபர்களுக்கு எதிரான தடை நீக்கம்

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை நீக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பிரித்தானியாவை தலமாக கொண்டு இயங்கும் உலக தமிழர் பேரவையும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனும் தடை 02

# ஐந்து தமிழ் இணைந்து கட்சிகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்பிப்பு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு, ஐந்து தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளனர் என அறியமுடிகின்றது. சர்வதேச கண்காணிப்புடனான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதோடு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் எனவும் அவர்கள் அந்த அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளனர். தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவரும் 02

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

## திருத்தத்தில் உடன்பாடு இல்லை

பெரும்பான்மை பலம் இருப்பதால், அனைத்து உறுப்பினர்களையும் அவர்களே நியமிக்க முடியும் என்றும் ரஞ்சித் மத்துமபண்டார குற்றம் சாட்டினார்.10 உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புச் சபையானது ஏழு உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்குள்ளும் மூன்று உறுப்பினர்களை வெளியிலிருந்தும் நியமிக்கும்.

இருப்பினும் 22வது திருத்த சட்டமூலத்தில் 19வது அரசியலமைப்பின் ஜனநாயக அம்சங்கள் இழக்கப்பட்டுள்ளதாக ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவித்தார்.

## நாளை முதல் தபால் கட்டணங்கள் அதிகரிப்பு

குறைவடைந்துள்ளதாகவும், தற்போது தபாலிடப்படும் 95ூ இற்கும் அதிககடிதங்கள்வர்த்தகநிறுவனங்கள்மற்றும்அரசாங்கத்தினுடையதாக காணப்படுவதாக தபால் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

## ஒரு தொலைபேசி எண்ணில் பல வாகனங்களை பதிவு செய்ய புதிய வசதி

வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவு செய்யலாம்.

அதன்பின் பதிவுசெய்யப்பட்ட தொபேசி எண்ணின் சுயவிவரத்தில் உள்நுழைந்து, '**Add**' என்பதை அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியுமென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் (**ICTA** தெரிவித்துள்ளது.

## வைத்தியசாலைகளில் மருந்து..

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் அனைத்து வைத்தியசாலைகளிலிருந்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக வைத்தியர் ஹரித அலுத்கே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ...

பட்டியலில் இருந்து அரசாங்கம் நீக்கியுள்ளது. பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட 6 அமைப்புகளும் 316 நபர்கள் மீதான தடையை நீக்கி பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. உலக தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழர் பேரவை, அவுஸ்ரேலியத் தமிழர் பேரவை, கனடியத் தமிழ் தேசியப் பேரவை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியன பாதுகாப்பு அமைச்சினால் தடை செய்யப்பட்டன. வடக்கின் நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக்கு அவர்களின் ஆதரவு வேண்டும் என அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியது. இதனை அடுத்தது 2014 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கிய நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் அவர்கள் மீதான தடையை அறிவிதித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து தமிழ் இணைந்து கட்சிகள் ஐ.நா மனித..

பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா ஆகியோரே இந்த அறிக்கையை அனுப்பிவைத்துள்ளனர். மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடதக்கது.

# மட்டு நகரில் வீதி ஓரத்தில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு நகரில் ஆண் ஒருவர் வீதி ஓரத்தில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவரை பொல்லால் தாக்கிய இரு இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை (13) கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

முனைத்தீவு பெரிய போரதீவு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 11ஆம் திகதி மட்டுநகர் லொயிஸ் வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் வீதி ஓரத்தில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மீட்கப்பட்டது. இதனை தொடர்ந்து 12 ஆம் திகதி குறித்த சடலத்தை அவரது மனைவி அடையாளம் காட்டிய நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான விசாரணையில் சிசிடீவி கெமரா ஒன்றினை சோதனையிட்டபோது அதில் உயிரிழந்தவரை இருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்து இரு தடவைகள் பொல்லால் தாக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளதையடுத்து குறித்த இருவரையும் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

இதில் நகர்பகுதியைச் சேர்ந்த 22,21 வயதான இளைஞர்கள் இருவரையும் சந்தேகத்தில் நேற்று சனிக்கிழமை கைது செய்ததுடன் சம்பவத்திற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர். இந்நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் மதுபோதைக்கு அடிமையாகிய நிலையில், மனைவியிடமிருந்து பிரிந்து அவரது தாயாருடன் வாழ்ந்து வந்ததுடன் வவுணதீவு பிரதேசத்தில் நகைகடை ஒன்றில் வேலை பார்த்து வந்ததாகவும் சம்பவதினம் குறித்த வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு அருகில் ஆடைகள் இன்றி வீதியில் இருந்துள்ள நிலையில் அந்த வீதியால் மோட்டர்சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் அந்தவீதியால் பெண்கள் பயணிப்பதால் குறித்த நபரை தும்புத்தடி பொல்லால் தாக்கிவிட்டு சென்று பின்னர் மீண்டும் அந்த வீதியால் திரும்பிவரும் போது அவர் அவ்வாறே ஆடையின்றி இருந்துள்ளதை கண்டு மீண்டும் தாக்கிவிட்டு சென்றுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சடலமாக மீட்கப்பட்டவரின் பிரேத பரிசோதனை நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்த நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோழிப்பண்ணையில் 101 கோழிகளை திருடிய இருவர் கைது

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்கேணி பிரதேசத்தில் கோழி பண்ணை ஒன்றில் இருந்து 101 கோழிகளை திருடிச் சென்ற இரு கொள்ளையர்களை நேற்று சனிக்கிழமை (13) இரவு கைது செய்துள்ளதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர்.

நாவற்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள கோழிப்பண்ணை ஒன்றில் இருந்து கடந்த மாதம் 20 ஆம் திகதி இரவு 101 கோழிகள் திருட்டுப்போயிருந்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. இதனையடுத்து கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் மேற்கொண்டுவந்த விசாரணையில் சிசிடீவி மூலம் கொள்ளையர்களை அடையாளம் காணப்பட்டனர். இந்த நிலையில் கொள்ளையர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு நாவற்கேணி பகுதியில் குறித்த இருவரும் பதுங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் அவர்களை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் நாவற்கேணி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புபட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளனர் எனவும் இவர்களுக்கு எதிராக பல வழக்குகள் இருப்பதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு புதிய நிருவாக சபை





கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபைக்கு புதிய வண்ணக்குமார் உள்ளிட்ட நிருவாக உறுப்பினர்கள் இன்று(14) ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டனர். தேசமகா சபையின் தீர்மானாத்திற்கமைய இந்நிருவாகத் தெரிவு இடம்பெற்றது. புதிய வண்ணக்கர் தலைவராக கலிங்குலத்தினைச் சேர்ந்த இ.மேகராசா, செயலாளர் வண்ணக்கராக படையாட்சி குடியைச் சேர்ந்த சி.கங்காதரன், வண்ணக்கர் பொருளாளராக உலகிப்போடி குடியைச் சேர்ந்த கோகுலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மட்டக்களப்பில் சட்டவிரோத உள்ளூர் துப்பாகியுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமனியாமடு பிரதேசத்தில் சட்டவிரோத உள்ளூர் தயாரிப்பு துப்பாகியுடன் 27 வயது இளைஞர் ஒருவரை நேற்று சனிக்கிழமை (13) கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று மாலை ஓமனியாமடு பிரதேசத்தில் பொலிசார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அந்தபகுதி காட்டில் இருந்து வீட்டிற்கு உள்ளூர் தயாரிப்பு துப்பாகியை எடுத்துக் கொண்டுச் சென்ற 27 வயது இளைஞனை மடக்கிபிடித்து கைது செய்ததுடன் துப்பாகியையும் மீட்டனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ராஜபக்ஸர்களின் குப்பை லொரியாக எவரும் மாற மாட்டார்கள்



இந்நாட்டை இந்தளவு அதலபாதாளத்திற்கு கொண்டு சென்றது ராஜபக்ஸ ஆட்சிதான் எனவும், அந்த ராஜபக்ஸர்களின் குப்பைகளை இழுக்கும் குப்பை வண்டியாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரும் மாற மாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று முழு நாடும் பொருளாதார சமூக அரசியல் ரீதியாக மோசமான நிலையில் உள்ளதாகவும், 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு தேர்தல்களிலும் மக்கள் சரியான பாதைக்கு பதிலாக தவறான பாதையை தேர்ந்தெடுத்தமையே இதற்கு காரணம் எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார். ரக்வான தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் பீ.கே.ஆரியவன்ச அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த வங்குரோத்து நாட்டில் நடக்கும் சமீபத்திய அதிசயம் சர்வகட்சி அரசாங்கம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டுக்கு தேவை அமைச்சுப் பதவிகளை அணிந்து கொண்டு பதவிக்குப் பின்னால் செல்லும் நாடு அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது உடனடியாக மேற்கொள்ள வேண்டியது தேர்தலை நடத்தி மக்களின் முடிவைக் கேட்பதுதான் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்கு மேல் தீர்வொன்று இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# கிண்ணியா முருகன் ஆலயத்தின் திருவிழா



**ஹஸ்பர்**

கிண்ணியா கடலூர் அருள் மிகு ஸ்ரீமுருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ திருவிழாவின் இரண்டாம் நாளான இன்று (14) காலை 8.00 மணிக்கு கொடியேற்றம் இடம் பெற்றது. கிண்ணியா ஊற்றடி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பூஜை வழிபாட்டின் பின் வேல் மற்றும் கொடிகள் ஊர்வலமாக கடலூர் முருகன் கோயிலுக்கு எடுத்து செல்லப்பட்டன. அங்கு பூஜைகள் இடம் பெற்ற பின் கொடியேற்றம் இடம் பெற்றன. ஸ்ரீமத் தெட்சன கைலாயமன போற்றப்படுகின்றதும் நாயன்மார்களால் தேவாரப் பதிகம் பாடப் பெற்றதுமான ஈழமணித் திருநாட்டின் திருகோணமலை எனும் புண்ணிய சேஷ்திரத்திலே கிண்ணியா ஹலஸ்தோட்டம் கடலூ ர் கிராமத்தில் பன்னெடுங்காலமாக கோயில் கொண்டு வீட்டிருந்து நாடி வரும் அடியார்களுக்கு வேண்டும் வரங்களையெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கும் கஜாவள்ளி,மகாவள்ளி சமேத ஸ்ரீமுருகப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சுபகிருத வருடம் ஆடி மாதம் 29ம் நாள் ஞாயிற்றுக் கிழமை புரட்டாதி நட்சத்திரமும் சித்திராமிர்தயோகமும் இன்றைய தினம் கொடியேற்றம் இடம் பெற்றது.இதனை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோபாலசிங்கம் ருகிந்தன் சர்மா ஆகியோர் தலைமையின் கீழ் கொடியேற்றம் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பக்த அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

# அரச படைகள் இந்த நாட்டில் ஒரு இனத்தை அழிக்கின்ற ஒரு படையாகவே இருந்திருக்கின்றார்கள்

**பாறுக் ஷிஹான்**

அரச படைகள் இந்த நாட்டில் ஒரு இனத்தை அழிக்கின்ற ஒரு படையாகவே இருந்திருக்கின்றார்கள். சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகளாக அவர்கள் இந்த நாட்டில் இருக்கவில்லை. அது மாத்திரமன்றி அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் நாங்கள் பிறந்து வளர்ந்தவர்கள். நேரடியாக எம்மவர்கள் கொலை செய்யப்பட்டதனை அவதானித்தவன் என்ற வகையில் எல்லைக் கிராமங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.குறிப்பாக அம்பாறை என்ற நகரமும் கூட எங்களுடைய தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.இன்று அங்கு தமிழர்களின் எந்தவொரு குடியுருப்பும் இருந்த எந்தவொரு அடையாளமோ இல்லை என்ற செய்தியை சொல்ல விரும்புகின்றேன் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(12) மாலை அகம் மனிதபிமான வள நிலையம்(யுஉசுஊ) சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் (ீஊஊது) அமைப்பின் ஏற்பாட்டில் வீரமுனை பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

தமிழர்களின் இன ஒழிப்பின் அங்கமாக இந்த வீரமுனை படுகொலை நடந்தேறி இருக்கின்றது. கடந்த 32 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டி விரட்டி வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இத்தினத்தை அனுஸ்டித்து அஞ்சலி செலுத்தி வருகின்றோம்.உண்மையில் இலங்கை நாட்டில் தமிழரான பிறந்த எங்களுக்கு இது தான் நிலைமை என்ற செய்தியை உலகத்திற்கு சொல்கின்ற வகையில் இந்த நாட்டை ஆண்ட தலைவர்கள் தொடர்ச்சியாக அழித்து வந்திருக்கின்றார்கள் என்பது உதாரணமாகும்.

1990ஆம்ஆண்டுதமிழ்மக்கள்வாழ்ந்தபிரதேசங்களில் எந்தவிதமாக கேள்வி கணக்குமின்றி கொடூரமான



முறையில் சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகள் இந்த நாட்டில் ஒரு இனத்தை அழிக்கின்ற ஒரு படையாகவே இருந்திருக்கின்றார்கள். சமாதானம் நீதியை நிலைநாட்டுகின்ற அரச படைகளாக அவர்கள் இந்த நாட்டில் இருக்கவில்லை.அது மாத்திரமன்றி அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் நாங்கள் பிறந்து வளர்ந்தவர்கள்.நேரடியாக எம்மவர்கள் கொலை செய்யப்பட்டதனை அவதானித்தவன் என்ற வகையில் எல்லைக் கிராமங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

குறிப்பாக அம்பாறை என்ற நகரமும் கூட எங்களுடைய தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.இன்று அங்கு தமிழர்களின் எந்தவொரு குடியுருப்பும் இருந்த எந்தவொரு அடையாளமோ இல்லை என்ற செய்தியை சொல்ல விரும்புகின்றேன்.இந்த கிராமத்தில் சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை தெளிவு படுத்த விரும்புகின்றேன்.இங்கு வாழந்த தமிழர்களை தேடி தேடி அழித்தார்கள். கல்விமான்களாக இருந்தவர்கள் சமூகத்தில் பற்றுறுதி கொண்டவர்கள்.சகூகத்தை வழிநடத்த கூடியவர்களாக இருந்தவர்கள் உள்ளிட்டோரை அரச படையினர் திட்டமிட்டு அழித்திருந்தார்கள்.

ஆகவே நாங்கள் இவ்வாறான நினைவுகளை ஏன் நினைவு கூர்கின்றோம் எனில் எதிர்காலத்தில் இந்த நாட்டில் தமிழர்கள் வாழ்வதற்குரிய அனைத்து உரிமையும் கிடைக்கப்பெற வேண்டும்.தொடர்ச்சியாக இந்நாட்டில் தமிழர்கள் அடிமைத்தனத்துடன் தங்களது வாழ்வுரிமையை மறுக்கின்ற சூழலில் வாழ முடியாது என்ற அடிப்படையில் தான் நாங்கள் இந்த நினைவு கூறல்களை நினைவு கூர்ந்து வருகின்றோம்.குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் கொலை செய்யப்பட்ட வரலாறுகளை மறந்து விட முடியாது.

அதன் அடிப்படையில் வீரமுனை மாத்திரமல்லாது சொறிக்கல்முனை ,பெரியநீலாவணை, சவளக்கடை, திராய்க்கேணி, காரைதீவு ,அக்கரைப்பற்று, உடும்பன்குளம், பொத்துவில், வளத்தாப்பிட்டி, மல்வத்தை ,போன்ற பிரதேசத்தில்திட்டமிட்டுஎங்களதுமக்கள்அழிக்கப்பட்ட வரலாறுகளை நீங்கள் நினைவு கூற வேண்டும். எனவே எங்கள் மக்கள் நிலையான சமாதானத்தை வேண்டியவர்களாக இந்த மண்ணிலே நிலையாக வாழ வேண்டும் என்பதற்காக தமிழர்களாகிய நாங்கள் எமது மக்கள் மீது அக்கறையுடன் தொடர்ச்சியாக எமது மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்துக்கொண்டு இணைந்து பயணிப்போம் என கூறினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனையில் அனுஷ்டிக்கப்பட்டதுடன் வீரமுனையில் ஆலயத்திற்குள் புகுந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 55 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம். மன்னிக்கவும் மாட்டோம்.எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்பும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நினைவேந்தலை நடத்தி வருகின்றோம் என கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# எமது இனத்தை பாதுகாப்பதற்காக இனவாதி என்ற பெயருடன் நாம் பயணிக்கின்றோம்

**பாறுக் ஷிஹான்**

எங்களுடைய இனத்திற்காக எமது குரலை உயர்த்தி பேசினால் எங்களை இனவாதி என கூறுகின்றனர்.நிச்சயமாக எமது இனத்தை பாதுகாப்பதற்காக இனவாதி என்ற பெயருடன் தான் நாம் பயணிக்கின்றோம்.இக்கொலைக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும்.காணிகள் தேவையெற்படின் அம்பாறை மாவட்டத்தில் நிதி கொடுத்து வாங்குங்கள். அப்பாவி மக்களை கொன்று விடாதீர்கள் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(12) மாலை அகம் மனிதபிமான வள நிலையம்(யுஉசுஊ) சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் (ீஊஊது) அமைப்பின் ஏற்பாட்டில் வீரமுனை பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட மாதம் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு மனித உரிமை மீறல்களும் படுகொலைகளும் இடம்பெற்றிருந்தன.இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உறவுகள் பல்வேறு அவலங்களுக்கு உள்ளானார்கள்.இந்த கொலைகளுக்கான நீதி உரிய முறையில் குடும்பங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான அப்பாவி மக்களை கொலைகள் செய்திருந்தார்கள்.

இந்த அஞ்சலியுடன் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்துவோம். சுனாமியில் இறந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்துவோம்.படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் நன்றி செலுத்துவோம்.ஏனெனில் நன்றி மறக்காதது தமிழ் சமூகம்.எங்களது முன்னோர்கள் எவ்வாறு இறந்தாலும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது எங்களது கடமையும் கலாச்சாரத்தின் பண்பாடும் ஆகும்.ஆனால் இன்று சிலர் பழைய விடயங்களை ஏன் கிளறுகின்றார்கள்.ஏன் அஞ்சலி செலுத்துகின்றார்கள் என்ற கேள்விகளை தொடுத்து இனங்களுக்கிடையே



நல்லிணக்கம் சீர்குலைவதாக குறிப்பிடுகின்றார்கள்.

இது தவறான கண்ணோட்டமாகும்.நீங்கள் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான அப்பாவி மக்களை கொல்லக் கூடாது என்பதற்காகவே தான் நாங்கள் தொடர்ச்சியாக இவ்வாறான விடயங்களை வெளியில் கொண்டு வருகின்றோம்.சமூகங்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும்.மனிதர்கள் மனித உரிமைகளுடன் வாழ வேண்டும்.மனிதனை மிருகங்கள் கொலை செய்வதை போன்று எவரும் எத்தனிக்க கூடாது என்பதற்காக இவ்வாறான விடயங்களை மேற்கொண்டு வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றோம்.

சிலர் இவ்வாறான விடயங்களை தவறாக கூறி வரலாற்றினை மாற்ற முயல்கின்றார்கள்.வரலாறானது கொலைகாரர்களையும் துரோகிகளையும் மறக்க பொதுமக்களை விடாது என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்.நாங்கள் எந்த மதத்திற்கோ எந்த குலத்திற்கோ எந்த இனத்திற்கோ எதிரானவர்கள் அல்லர்.1990 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற அவலக்குரல் இனிவரும் காலங்களில் கேட்க கூடாது.அதற்கு இவ்வாறான கொலைகளின் சூத்திரதாரிகளை கைது செய்ய வேண்டும் என்பதை எங்களுடைய தலைமைகள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆனால் சிறு தவறு செய்யாத அப்பாவி இளைஞர்கள் சிறையில் வாடுகின்றார்கள்.ஆனால் இவ்வாறான படுகொலைகளை செய்தவர்கள் எம் கண் முன்னே நடமாடி திரிகின்றார்கள்.எங்களுடைய இனத்திற்காக எமது குரலை உயர்த்தி பேசினால் எங்களை இனவாதி என கூறுகின்றனர்.நிச்சயமாக எமது இனத்தை பாதுகாப்பதற்காக இனவாதி என்ற பெயருடன் தான் நாம் பயணிக்கின்றோம்.இக்கொலைக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும்.காணிகள் தேவையெற்படின் அம்பாறை மாவட்டத்தில் நிதி கொடுத்து வாங்குங்கள். அப்பாவி மக்களை கொன்று விடாதீர்கள் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன், சமூக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஸ் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனையில் அனுஷ்டிக்கப்பட்டதுடன் வீரமுனையில் ஆலயத்திற்குள் புகுந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 55 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம். மன்னிக்கவும் மாட்டோம்.எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்பும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நினைவேந்தலை நடத்தி வருகின்றோம் என கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆறுமுகன் தொண்டமானுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி

**தலவாக்கலை பி.கேதீஸ்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய் சம்பளத்தை வழங்க மறுத்து கம்பனிகள் தாக்கல் செய்திருந்த வழக்கில் தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டமையானது மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படவேண்டும்என்றதீர்மானம்சம்பளநிர்ணய சபை ஊடாக கடந்த வருடம் நிறைவேற்றப்பட்டது. அமரர் ஆறுமுகன் தொண்டமானின் விடா முயற்சியாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழுத்தத்தினால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள கோரிக்கைக்கு சம்பள நிர்ணய சபை அனுமதி வழங்கியது. 1000 ரூபாய் சம்பளம் வழங்கும் அரசாங்கத்தின் யோசனையை இரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 2021 இல் முதலாளிகள் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை கடந்த வாரம் 9ம் திகதி தள்ளுபடி செய்தது.

அத்துடன், நாட் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை 22 கம்பனிகளும் கடைப்பிடிக்கவேண்டும். மேலும் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 1000 ரூபாயை வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. இவ்வுத்தரவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ிக்கு கிடைத்த வெற்றியாகும். எதிர்காலத்திலும் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளத்தை பெற்றுத் தருவதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருப்போதும் பின்வாங்காது என்றார்.

# 14வது நாளாக அரசியற்தீர்வு கோரிய 100 நாட்கள் செயல்முனைவு



**(சுமன்)**

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் 100 நாட்கள் செயல்முனைவானது வடக்கு கிழக்கு மாவட்டங்களில் 14வது நாளாக இன்றும் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தினம் யாழ்ப்பாணம் புங்குடுதீவு பிரதேசத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்தில் யாழ் மாவட்ட சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள், போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது விசேட அம்சமாக வர்ண கைச்சின்னம் பதிக்கும் செயற்திட்டம் ஏற்பாட்டுக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியற் தீர்வு கோரிய இச்செயற்திட்டமான இன்றுடன் பதினான்காவது நாளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் திறந்து வைப்பு




**த.சுபேசன்**

யாழ்மாவட்டபெண்சுயதொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் 12ஃ08 வெள்ளிக்கிழமை பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் மாவட்ட சமாசத்தின் உப செயலாளர் திருமதி சுமதி வசந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் ரா.சசீலன், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி சி.அஞ்சனாதேவி மற்றும் யாழ் மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.லேணுகாராணி ஆகியோர் கலந்து கொண்டு சஞ்சீவி விற்பனை நிலையத்தை திறந்து வைத்திருந்தனர்.

மேலும் நிகழ்வில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண இணைப்பாளர் கு.ரவிக்குமார்,மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம்,பனை அபிவிருத்தித் திணைக்கள வடமாகாண முகாமையாளர் லோகநாதன், விழுது சமூக மேம்பாட்டு அமைய நிதி முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.குறித்த "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையமானது விழுது சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அவுஸ்ரேலியன் எயிட் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுனரை பதவியிலிருந்து துரத்துதல் வேண்டும்

## சமாச தலைவர் லோகநாதன் கூளுநரை

கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் துரத்தப்பட வேண்டியவர் ஆவார் என்று கல்முனை அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார். மல்வத்தை விபுலானந்த சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் கடந்த மூன்று தசாப்த காலமாக செயல் இழந்து இருந்த நிலையில் இவரின் பகீரத முயற்சியில் ஞாயிற்றுக்கிழமை (14) புனரமைப்பு செய்யப்பட்டது.

1988 இல் இது பதிவு செய்யப்பட்டு இரு வருடங்கள் சிறப்பாக இயங்கி உள்ளது. ஆனால் கலவரம் காரணமாக இப்பிரதேச மக்கள் 90 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து செல்ல நேர்ந்ததால் முடங்கி போனது. புலம்பெயர் நாடுகளில் உள்ள வட மாகாண அன்பர்கள் சிக்கன கடனுதவு கடனுதவு கூட்டுறவு சங்க முறைமை மூலமாக வடக்கு, கிழக்கில் உள்ள தாயக உறவுகளுக்கு உதவி செய்ய முன்வந்து உள்ளனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் செயல் இழந்த நிலையில் உள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களை புனரமைக்கின்ற வேலை திட்டத்தை கூட்டுறவு திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் லோகநாதன் முன்னெடுக்கின்றார். கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறுமுகம் நடராசலிங்கத்தின் பங்கேற்புடன் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.



இதில் உரையாற்றியபோது லோகநாதன் மேலும் தெரிவித்தவை வருமாறு, புலம்பெயர்ந்து வாழ்கின்ற வட மாகாண உறவுகளின் பங்களிப்பு மூலம் சிக்கன கடனுதவு கூட்டுறவு முறைமை மூலம் எமது கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுகின்ற வேலை திட்டங்கள் பலவற்றையும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

அவர்கள் எமது கிழக்கு மாகாண மக்கள் மீது காட்டுகின்ற அன்பு, அக்கறை ஆகியவற்றுக்கு நாம் நன்றி உள்ளவர்களாக் உள்ளோம். அரசியல்வாதிகள் செய்து தர வேண்டியவற்றை அவர்கள் முன்னின்று செய்து தருகின்றார்கள். கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் துரத்தப்பட வேண்டும். அவர் எமது மக்களுக்கு இது வரை உருப்படியாக எதையும் செய்து தரவே இல்லை. அவர் ஒரு பெண்ணாக இருந்தும் எமது மண்ணையும், மக்களையும் வாழ வைக்க தவறி விட்டார். அவர் இறக்குமதி செய்யப்பட்டவர் என்பதால் எமது மண் மீதும், எமது மக்கள் மீதும் அவருக்கு உண்மையான அக்கறை கிடையாது. நான் இந்த இடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காலம் சென்ற தலைவர் அஷ்ரப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

ஏனென்றால் மல்வத்தை மக்களுக்கு அவர் சந்தை ஒன்றை கட்டி கொடுத்து இருக்கின்றார். இங்கு வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட வேண்டும். மக்கள் வங்கி கிளை ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏராளமான அபிவிருத்திகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றுக்கு வசதியாக தனியான பிரதேச செயலகம், தனியான பிரதேச சபை மல்வத்தையை மையமாக கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இதற்காக நான் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மூலம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றேன். ஆணை குழு முன் ஆஜராகி சாட்சியம் வழங்கியும் உள்ளேன்.

# பராசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50வது ஆண்டு விழா



**த.சுபேசன்**

வடமராட்சி–மாவடி பராசக்தி விளையாட்டுக் கழகத்தின் பொன்விழா நிகழ்வுகள் 13ஃ08 சனிக்கிழமை பிற்பகல் கழக மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. குறித்த ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.ஆண்டு விழா நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக கழகத்தின் மூத்த வீரர்கள் கௌரவிப்பு,சிறார்களுக்கான பரிசளிப்பு,பாரம்பரிய விளையாட்டான கயிறு இழுத்தல் போட்டி ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

# அரபுக் கல்லூரியின் ஸ்தாபக தலைவர் மரணம்

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

வாழைச்சேனை முகைதீன் ஜு/ம்மா பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் தலைவரும்இ அல் நஹ்ஜத்துல் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியின் ஸ்தாபக தலைவருமான அல்ஹாஜ் எம்.எல்.ஹச்சி முகம்மட் சிறிது காலம் நோயுற்ற நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார். இவர் பல வருட காலமாக கல்குடா பிரதேச சமூக நலன் விடயங்களில் தனது வாழ்வை அர்ப்பணித்த நல்லுள்ளம் கொண்ட மனிதர் என்பதுடன்இ மார்க்க ரீதியாக கல்குடா பிரதேசத்தில் விழிப்புணர்வையூட்டி நூற்றுக்கணக்கான ஹாபிழ்களை உருவாக்கி மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெருமகனாவார்.



இவரது ஜனாஸா நல்லடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை 04ம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் மாலை 05 மணிக்கு அல் நஹ்ஜத்துல் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டு இஷா தொழுகையினை தொடர்ந்து ஹைராத் பள்ளிவாயல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

# கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்துவதில் நிலவிய இழுபறிக்கு சுமூகத் தீர்வு



**(அஸ்லம் எஸ். மௌலானா)**

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதில் நிலவி வந்த இழுபறி நிலைக்கு சுமூகத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இன்று (14) அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளும் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிந்தது. மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் மாடு விநியோகஸ்தர்களுடன் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் மேற்கொண்ட கலந்துரையாடலில் இத்தீர்வு எட்டப்பட்டிருக்கிறது.

கல்முனை மாநகர சபையில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபையின் கணக்காளர் எம்.எம்.ரியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாட்டிறைச்சியின் விலை முறையற்ற விதத்தில் அதிகரிக்கப்பட்டிருப்பதால், மக்கள் அதனைக் கொள்வனவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதை கருத்தில் கொண்டு, 01 கிலோ கிராம் மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1600 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என முதல்வரினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும் கட்டுப்பாட்டு விலையை அமுல்நடத்துவதில் மாநகர சபைக்கும் இறைச்சிக் கடைக்காரர்களுக்குமிடையே இழுபறி காணப்பட்டு வந்தது. இதனால் பெரும்பாலான இறைச்சிக்கடைகள் 06ஆம் திகதி சனிக்கிழமை முதல் திறக்கப்படாமல் இருந்து வந்தன. இதனால் நுகர்வோர் மாட்டிறைச்சியை கொள்வனவு செய்ய முடியாமல், அன்றாட உணவுத் தேவையை நிறைவேற்றுவதில் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், மாட்டிறைச்சி வியாபாரிகளையும் மாடு விநியோகஸ்தர்களையும் மாநகர சபைக்கு அழைத்து முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தியதன் பேரில் நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களையடுத்து 01 கிலோ கிராம் மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1700 ரூபாவுக்கும் தனி இறைச்சி 1900 ரூபாவுக்கும் விற்பனை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், கட்டாயம் டிஜிட்டல் தராசை பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றை மீறுவோரின் இறைச்சிக்கடை வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என இதன்போது முதல்வரினால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 2200 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# 48 ஆவது பட்டமளிப்பும் கௌரவிப்பு நிகழ்வும்




**ஹஸ்பர்**

மூதூர் நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரியின் 48 ஆவது பட்டமளிப்பு விழா மிகக் கோலாகலமாக நேற்று(13) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் 98 ஆலிம்களுக்கும், 24 ஆலிமாக்களுக்கும், 22 ஹாபிழ்களுக்குமான பட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரியின் தலைவர் மற்றும் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம். கரீம் ( நத்வி) அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் (கபூரி) அவர்களும், சிறப்பு அதிதியாக மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸ் , கௌரவ அதிதிகளாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். ஜவாத் ( நளிமி) அவர்களும், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி இஸட்.எம். எம்.முனவ்வறா நளீம் , அதிதியாக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம்.எம். அப்பாஸ் அவர்களும் நிருவாக உறுப்பினர்களும், ஆசிரியர்களும், பெற்றார்களும், நலன்விரும்பிகளும், நன்கொடையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் உயர் விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

''சேகுந் நத்வா விருது', இது நத்வாவில் வழங்குகின்ற உயர் விருதாகும். இம்முறை அஷ்ஷெய்க் எம்.எம். கரீம் ( நத்வி) அவர்களுக்கு 1981 தொடக்கம் நிருவாக உறுப்பினராகவும், 1993 தொடக்கம் பொருளாளராகவும், 2015 தொடக்கம் தலைவராகவும், 1994 தொடக்கம் இற்றை வரை அதிபராகவும், 2017 இல் பெண்கள் பிரிவை மீளுருவாக்கம் செய்தமைக்காகவும் இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இவ்விருது முன்னால் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.ஏ. ஜப்பார் ( பாரி) அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நத்வாவின் உயர் கௌரவ விருது' இவ்விருது நத்வாவின் வரலாற்றில் மூதூரின் கல்வித் துறையில் பங்காற்றியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமையஇவ்விருது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். ஜவாத் ( நளிமி) அவர்களுக்கு நிருவாக சபையின் ஒப்புதலுடன் தலைவரினால் பொன்னாடை அணிவித்து கௌரவித்து வழங்கிவைக்கப்பட்டது. பிரதம அதிதிக்கான நினைவுச் சின்னம் இது நீண்டகாலம் இக்கல்லூரியோடு தொடர்புபட்ட எமது கல்லூரியை நேசிக்கும் அஷ்ஷெய்க் எஸ். எல். நௌபர் ( கபூரி) அவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது. கலாநிதி மற்றும் முதுமாணி முடித்தோருக்கான கௌரவம்.

இது எமது நத்விப் பட்டத்தை பூர்த்தி செய்து கலாநிதிப் பட்டத்தை உம்முல் குறா பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்த அஷ்ஷெய்க் எம்.எம்.எம். ஜன்னா அவர்களுக்கும், முதுமாணிப் பட்டத்தை லண்டன் ரொபேர்ட் கோல்டன் பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்த அஷ்ஷெய்க் எம்.வை.எம். அஸ்லம் அவர்களுக்கும், மற்றும் முதுமாணிக்கான பட்டக் கற்கையை பூர்த்திசெய்த அஷ்ஷெய்க் ஜே.எம். /ஹுசைன் ( நத்வி) அவர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டது.பல்கலைக்கழகத்தை உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் முதல் பட்டத்தை பூர்த்தி செய்தோருக்கும் கற்றுக்கொண்டிருப்போருக்கும் இக்கௌரவம் வழங்கப்பட்டது. 48 ஆவது பட்டமளிப்பு விழாவில் அத்திகளும் உரையாற்றினர். மதிய போசனத்துடன் நிறைவுற்றது.

# அப்ரோஸ் ஜஹான் தேசியத்தில் முதலிடம்

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

தேசிய வாசிப்பு போட்டி நிகழ்ச்சியில் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மாணவி ஏ.ஏ. அப்ரோஸ் ஜஹான் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தெரிவித்தார். 100 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு இலங்கை தேசிய கூட்டுறவு பேரவை அண்மையில் நடாத்திய தேசிய மட்ட பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டே இம் மாணவி இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.



வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் தரம் 12 உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று வரும் குறித்த மாணவி அப்ரோஸ் ஜஹானுக்கு பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார். இவ்வாறு தேசியத்தில் சாதனை படைத்து பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த மாணவிக்கு கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் பராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

# ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் அமைப்பினால் மையவாடி சிரமதானம்

**நூருல் /ஹுதா உமர்**

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்டம் மற்றும் அமைப்பினால் சாய்ந்தமருது தக்வா ஜு/ம்மா பள்ளிவாசலுக்கு சொந்தமான மையவாடியினை சுத்தம் செய்யும் வேலைத் திட்டமொன்று இன்று ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்டம் மற்றும் அமைப்பின் பொதுச்செயலாளர் லாபீர் சிப்னாஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.



பற்றைக்காடாக வளர்ந்திருந்த சிறிய மரங்கள், புற்கள் வெட்டி அகற்றப்பட்டதுடன் அழகாக சிரமதானம் செய்யப்பட்டது. இந்த பணியில் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்டம் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள், சமூக நலன் விரும்பிகள், சாய்ந்தமருது நடுத்துரை மீனவர் சங்கத்தினர்கள் மற்றும் பொது மக்கள் எனப்பலரும் பங்கேற்றனர்.

# இடைவிலகும் தொகை அதிகரிக்கும்



**(எஸ். சதீஸ் )**

உலகலாவிய ரீதியில் சிறுவர் தொழிலாளர் உருவாவதை பலரும் ஏற்றுகொள்ளாத இந்த நிலையில் இலங்கையில் பாடசாலை மாணவர்களை தனியார் துறைகளில் தொழில் புரிவதற்கு இடமளித்தால், மாணவர்களின் இடைவிலகும் தொகை அதிகரிக்கும் அதேவேளை சிறுவர் தொழிலாளர்கள் உருவாகும் நிலையும் ஏற்படும். என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ருபேஷன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களை பகுதி நேர அடிப்படையில் தொழில் வழங்குவது தொடர்பில் அண்மையில் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ருபேஷன் மட்டக்களப்பில் வைத்து சனிக்கிழமை (13ம் திகதி) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அண்மையில் பாடசாலை மாணவர்கள் தனியார் துறைகளில் மாதாந்தம் 20 மணிநேரம் தொழில் புரிவதற்கு இடமளிக்க வேண்டுமென தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். அதற்கமைய ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பல கருத்துக்கள் பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கத்தின் இது தொடர்பான நிலைப்பாடு என்னவெனில், ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டால் அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற ஒரு வழிமுறை அல்லது திட்டமிடல் இருப்பது அவசியம் ஆகும். மாணவர்கள் எவ்வாறான நிறுவனங்களில் வேலைக்கு செல்ல வேண்டும் எவ்வாறான வேலையை எத்தனை மணித்தியாலம் செய்ய வேண்டும் எந்த நேரத்தில் வேலைக்கு செல்ல வேண்டும் இவர்களுக்கு எவ்வாறு சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்கின்ற விடயங்கள் எதுவும் இன்றியே இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் பலர் பொருளாதார ரீதியாக பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனவே மாணவர்கள் பணத்தினை கையில் பெற்று கொண்டதன் பின்னர் அதன் பால் ஈர்க்கப்பட்டு முற்றாக முழுநேர வேலையில் ஈடுபடுவதற்க்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. இன்றய சூழலில் பொருளாதார நிலைமையை சீர் செய்ய தங்கள் குடும்ப சுமைகளை கையில் எடுத்துக்கொண்டுள்ள பல சிறுவர்கள் இருக்கிறார்கள். இவ்வாறான சிறுவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு கட்டுக்கோப்பு இருத்தல் வேண்டும் இல்லையேல் கல்வியில் இடைவிலகும் மாணவர்கள் தொகை அதிகரிப்பதோடு குறைந்த சம்பளத்தில் சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற நிலையும் ஏற்படும். உலகலாவிய ரீதியில் சிறுவர் தொழிலாளர் உருவாவதை பலரும் ஏற்றுகொள்ளாத இந்த நிலையில் கோவிட் 19 காரணமாக கல்வியை இழந்து நிற்கும் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி இந்த திட்டம் முன்வைக்க பட வேண்டுமே தவிர முன்னேற்பாடு இன்றி முன்வைக்கப்படும் இந்த திட்டத்தால் பாரிய கல்வி சார்ந்த சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். என தெரிவித்தார்.

# கதிர்காம பாதயாத்திரை வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும்

**( காரைதீவு நிருபர் சகா)**

மூவின மக்களும் சங்கமிக்கின்ற ஐக்கிய புனித பூமியான கதிர்காமம் ஆடிவேல் விழாவை முன்னிட்டு நடைபெறும் புனித பாதயாத்திரை இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானி பிரகடனம் செய்யப்படவேண்டும். இவ்வாறு கோரும் தீர்மானம் காரைதீவு பிரதேச சபையில் அனைத்து தமிழ் முஸ்லிம் உறுப்பினர்கள் இணைந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



காரைதீவு பிரதேச சபையின் 54 ஆவது மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் மேற்படி தீர்மானத்திற்கான பிரேரணையை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்மொழிந்தார். மாளிகைக்காடு சுயேட்சை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர் வழிமொழிந்தார். ஏனைய அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இப் பிரேரண இலங்கையின் ஜனாதிபதி பிரதமர் அமைச்சர்கள் கட்சி தலைவர்கள் ஆகியோருக்கு தீர்மானப் பிரதிகள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. பிரேரணையை முன்வைத்து பேசுகையில் மேலும் உரையாற்றுகையில்.. வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழாவை ஒட்டிய பாதயாத்திரை இம்முறை பலத்த சோதனைகளுக்கு உள்ளாகி இருந்தது. அது மட்டுமல்ல இந்த பாதயாத்திரை அதன் புனிதத்துவத்தை இழந்துவிட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு பல அசாதாரண சம்பவங்களும், அனர்த்தங்களும் இடம்பெற்றிருக்கின்றன . இப் பாதயாத்திரை முறையாக சீரமைக்கப்பட வேண்டும். புனிதத்துவமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதன் கலாச்சாரம் பாரம்பரியம் பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்று அடியார்கள் பலர் ஆணித்தரமாக கருத்துக்களை என்னிடம் தெரிவித்துள்ளார்கள்.

இம்முறை, வரலாற்றில் என்றும் இல்லாத அளவிலே யால சரணாலய பகுதியில் உள்ள வியாழ ஆற்றிலே திடீரென ஐந்து அடிக்கு காட்டாற்று வெள்ளம் வந்து பெரும் அனர்த்தத்தை அடியார்களுக்கு ஏற்படுத்தியது . இது ஒரு தற்செயலான செயல் அல்ல. இது முருகனின் சோதனை. புனித பயணத்தை மாசுபடுத்துபவர்களுக்கு கற்பித்த பாடம் என்றெல்லாம் பல அடியார்களும் பல கருத்துக்களை கூறினார்கள். ஏனைய சமய யாத்திரை மற்றும் விரதங்கள் போன்று அரசாங்கத்தினால் இதற்கான அத்தனை சலுகைகளும் இந்த யாத்திரைக்கும் வழங்கப்படவேண்டும். அது மாத்திரம் அல்ல பாதயாத்திரை செல்வோரின் வயது கட்டுப்பாடுகள் நடைமுறை விதிகள் என்பன முறைப்படி கட்டமைக்கப்பட வேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஆசார பூர்வமாக பக்தி முக்தியாக புனிதமாக கட்டுக் கோப்பாக நடைபெற வேண்டும் என்றார். முன்னாள் அமைச்சர் மனோகணேசன் இதனை வர்த்தமானி பிரகடனம் செய்வேன் என்று காட்டுப் பாதை திறக்கப்படும் போது அவர் கூறினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆட்சி மாறிவிட்டது. எனவே இதனை நாம் நிறைவேற்ற வேண்டும். என்றார்.

# இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடல்



**(அ . அச்சுதன்)**

இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை கள் தொடர்பான வழிகாட்டல் கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட அரசசார ஒன்றியத்தின் தலைவர் டாக்டர்.திரு.என். ரவிச்சந்திரன் தலைமையில் திருகோணமலை சர்வோதய நிலயத்தில் நேற்று (13) நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் அவர்களின் நெறிப்படுத்தலில்

20பேர்வரை கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் மூவின சமூகத்தையும் சார்ந்த புத்திஜீவிகள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள் பிரதேச சபை உறுப்பினர் எனபலரும்கலந்து கொண்டனர். இச்செயலமர்வு இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இளைஞர் திட்ட பிரிவு மற்றும் மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

